

ஹன்சிகா

# பாத்ரூமில் கேமரா! ஹன்சிகா போல யாரும் சிக்கலாம் உஷார்!

## -முன்னெச்சரிக்கை ரிப்போர்ட்!

பிரபல நடிகை த்ரிஷாவின் அந்தரங்க குளியலறைக் காட்சி இணையதளங்களில் வெளியான போது தென்னிந்திய ரசிகர்களையே திகைக்க வைத்தது. அதற்குப் பிறகு, பல்வேறு பிரபல நடிகைகளின் அந்தரங்க ஃபோட்டோக்கள், செல்ஃபிகள் என வெளியாகி பரபரப்பை பற்றவைத்துக் கொண்டிருக் கின்றன. சமீபத்தில் வெளியான பிரபல நடிகை ஹன்சிகாவின் குளியலறை வீடியோக் காட்சிகள் கோலிவுட்டில் தொடங்கி தமிழகத்தைப் பரவலாக கிறு கிறுக்க வைத்திருக்கிறது.

பாத்ரூமில் ஹன்சிகா குளித்துக்கொண்டிருக் கும்போது... அவருக்கு தெரியாமல் வாஷ்பேசின் அடிப்புறத்தில் ரகசிய கேமரா வைத்து படம் பிடிக்கப்பட்டு தற்போது, வாட்ஸ்-அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களிலும் வெளியாகியிருப்பது நடிகைகளை மட்டுமல்ல குடும்பப் பெண்களையும் திகைக்க வைத்திருக்கிறது. பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்த வீடியோ குறித்து நடிகை ஹன்சிகா இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

''இது ஒரு நடிகையின் வீடியோதானே என்று பார்த்துவிட்டு கடந்துபோக முடியாது; போகவும் கூடாது. காரணம், நடிகையும் ஒரு பெண்தான். ஒரு நடிகை தன் சுய விருப்பத்தோடு கிளுகிளுப்பு காட்சிகளில் நடிப்பது என்பது வேறு. ஆனால், அதே நடிகையின் அறையில் கேமராவை ஃபிக்ஸ்பண்ணி அவரது அந்தரங்கத்தை படம் பிடித்து ரசிப்பது என்பது அசிங்கமானது; அருவருப்பானதும் கூட. எல்லோருமே பணத்தை மட்டுமே வாழ்க்கையில பிரதானமாக்கிக்கொண்டு தனிமனித ஒழுக்கத்தை யும் நீதியையும் இளைய தலைமுறைகளுக்கு சொல்லிக் கொடுக்க மறந்துக்கிட்டிருக்கிறதோட விளைவுதான் இதுபோன்று பெண்களின் அந்தரங்க வீடியோக்களை அந்தரங்கமாக படம்பிடிப்பதும் அதை நெட்டில் உலவவிடுவதும்'' என்று வேதனையோடு சுட்டிக்காட்டுகிறார் கவிஞரும் ஊடகவியலாளருமான சுகந்தி.

பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் வாதத்திற்கு எதிரான அமைப்பின் தலைவர் நிர்மலா கொற்றவை நம்மிடம், ''இரகசியக் கேமராக்கள் பொருத்தி பெண்களின் அந்தரங்க தருணங்களை, பெண் உடலை ஆபாசமாகப் படம்பிடித்து பெண்களை மிரட்டுவது என்பது... பெண் உடல் பற்றிய ஆணாதிக்க சமூகத்தின் கருத்தியலே இப்படிப்பட்ட பாலியல் ரீதியான வக்கிரங்களுக்கான அடிப்படை காரணம்.

இந்த ஆண் அதிகாரமே பல்வேறு வக்கிரங்களுக்கு வழிவகுக்கிறது, வன்புணர்வு, ஆபாசப் படமெடுத்தல் ஆகியவை இதன் நீட்சியே. இதுபோன்ற வக்கிரங்களை, ஆபாச புகைப்படங்களை, வீடியோக்களைக் கண்டு பெண்கள் அஞ்சக்கூடாது. நமது அச்சமே அவர்களது மூலதனம். ஒருவேளை பெண்கள் இதுபோன்ற அத்துமீறல்களுக்குள்ளாக நேர்ந்தால் துணிந்து அதை அம்பலப்படுத்த வேண்டும். காவல் துறையில் புகாரளிக்க வேண்டும். சட்டரீதியான நடவடிக்கையில் இறங்க வேண்டும். ஆனால், இந்த போராட்டத்தில் வெல்வது பெண்களால் மட்டுமே சாத்தியமில்லை. காவல்துறை, சட்டம், சமூகம் என அனைத்தும் பெண்களுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும்.

புகார் கொடுக்க வரும் பெண்களை கேவலமாகப் பேசாமல், அவர்களையே குற்றவாளிகளாக்காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். காதலனாக- கணவனாக இருந்தாலும் சரி. பெண்ணின் விருப்பமின்றி எவர் படம் எடுத்தாலும் அது வக்கிரமே, குற்றமே. தங்களுக்கு நேரும் பாலியல் சார்ந்த தொல்லைகளை வெளிப்படையாகப் பேசுவதற்கான சூழலை குடும்பமும் சமூகமும் பெண்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். புகார் கொடுக்கும் பெண் மற்றும் அவரது குடும்பத்தினரின் அடையாளங்கள் பற்றிய இரகசியம் காக்கப்பட வேண்டும். அவமானத்திற்கு பயந்து ஒடுங்குவதே வக்கிரங்கள் பெருக துணை நிற்கிறது'' என்கிறார் ஆவேசமாக.

கல்லூரி மாணவிகளான அஷ்வினி, பூஜிதாவோ, ''இந்தமாதிரி அந்தரங்க வீடியோக்கள் சமூக வலைதளங்களில் அதிவேகமாக பரவுவதை பார்க்கும்போதே நெஞ்சு பதறுது. ஒரு ஷாப்பிங் மாலுக்குபோயி ட்ரெஸ் எடுக்கிறோம். ட்ரையல் ரூம்ல போயி ட்ரையல் பண்ணிப்பார்க்கக்கூட நெஞ்சு திக்கு திக்குனு அடிச்சுக்குது. ட்ரைல் ரூம்ல கண்ணாடி இருக்கும். அது டூவே மிரரா இருந்தா நிச்சயமா ஏதாவது கேமரா ஃபிக்ஸ் பண்ணியிருப்பாங்களோன்னு பயம் ஏற்படுது. ஹோட்டல்களுக்கு சாப்பிடப்போறோம்... அவசரம்னு பாத்ரூம்க்குள்ள போகவே பயமா இருக்கு. குடும்பத்தோடு போயி ஹோட்டல் அறைகளில் தங்கவும் பயமா இருக்கு. ஏன்னா, இன்னைக்கு நடிகைகளின் அந்தரங்க வீடியோங்கிறதால அது வெளியில தெரியுது.

ஆனா, எத்தனை எத்தனை குடும்பப்பெண்களின் அந்தரங்க வீடியோக்கள் சமூக வலைதளங்களில் சத்தமில்லாமல் உலாவிக்கிட்டிருக்கு. இந்த, அந்தரங்க வீடியோக்கள் எல்லாமே தம்பதி களாக வந்து ஹோட்டல் அறைகளில் தங்கும்போது அவர்களுக்கே தெரியாமல் எடுக்கப்பட்டதுதானே? இதில், குறிப்பாக பாதிக்கப்படுவது பெண்ணாகத்தான் இருக்கிறது. சாதாரணமாக பேசிக்கொண்டிருப் பதைக்கூட நமக்கு தெரியாமல் ரெக்கார்டு பண்ணி வாட்ஸப்பில் அனுப்பிவிடும் வில்லங்கமான வில்லன்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஹிடன் கேமராக்களை வைத்து அந்தரங்கங்களை படம்பிடிக்கும்போது எப்படி எல்லாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்ற விழிப்புணர்வை பெண்கள் அமைப்புகள், மகளிர் ஆணையங்கள், காவல்துறை என அனைவரும் சேர்ந்து செய்யவேண்டும்'' என்கிறார்கள் கோரிக்கையாக.

கணவனுடன் வெளியிடங்களுக்குச் செல்லும் குடும்பப்பெண்கள் தங்களை ரகசிய கேமரா படம் பிடிக்கிறதா என்பதை எப்படி அறிந்துகொண்டு விழிப்புணர்வோடு இருப் பது என்பது குறித்து சைபர் க்ரைம் வழக்




சுகந்தி

பூஜிதா

ஹன்சா

நிர்மலா கொற்றவை

அஷ்வினி



சுறிகுர் ஹம்சா சொல்லும் தகவல்கள் ஆச்சர்யமூட்டுகின்றன. பொது இடங்களில் நம் அந்தரங்கத்தை பாதுகாத்துக்கொள்வதே ஒரு தனி தொழில்நுட்பமாகிவிட்டது. காரணம், அந்தளவுக்கு டெக்னாலஜிகள் மூலம் நம் அந்தரங்கங்கள் திருடப்படுகின்றன. முதலில், துணிக்கடைகளில் உடைமாற்றும் அறைகள் மற்றும் ஹோட்டல் போன்ற பொது இடங்களின் கழிவறைகளில் இருக்கும் கண்ணாடிகள் சாதாரண முகம் பார்க்கும் கண்ணாடியா அல்லது முகம் பார்க்கும் கண்ணாடிபோல தோற்றம்காட்டிவிட்டு, இருபுறமும் பார்க்கக்கூடிய வகையிலான டு வே மிரரா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். இதற்கு சில வழிகள் உள்ளன..

1. அது சுவற்றில் தொங்கவிடப்பட்டுள்ளதா? தொங்கவிடப்பட்டிருந்தால் அதன் பின்பகுதியில் சுவர் இருக்கிறதா என்பதை உறுதி செய்யவேண்டும். தொங்கவிடப்படாமல் சுவரிலேயே ஃபிக்ஸ் ஆகியிருந்தால் அது டு வே மிரராக இருக்கலாம். நீங்கள் உடை மாற்றுவதை ரூமுக்கு அந்தப் பக்கம் இருந்து கவனிக்க முடியும். 2. முகம் மட்டும் பார்க்கும் வகையில் கண்ணாடி அமைக்கப்பட்டுள்ளதா அல்லது இடுப்பு வரை பார்க்க முடிகிறதா? இடுப்பு வரை எனில் சந்தேகத்துக்குரிய கண்ணாடியாக இருக்கலாம்.

3. அந்த அறையின் வெளிச்சம் சாதாரணமாக இருப்பதை விட அதிக வெளிச்சமாக இருந்தால் உடை மாற்றுவதைத் தவிர்த்தல் நலம். ஏனெனில், டு வே மிரர் வழியாக இது எதிர்த்தரப்புக்கு நம் உடலைப் பளிச்செனக் காட்டக்கூடியது.



எஸ்.பி.பாலு



விஜயகுமார்

4. அறையின் லைட்டை ஸ்விட்ச் ஆஃப் பண்ணிவிட்டு உங்கள் மொபைலில் உள்ள டார்ச்லைட் வெளிச்சத்தை சட்டென கண்ணாடி மீது சாய்வாக அடித்தால், டு வே மிரராக இருந்தால், மறுபுறம் என்ன இருக்கிறது, யார் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் அங்கு உடைமாற்றுவதைத் தவிர்த்துவிடலாம்.

5. உங்கள் விரல் நகத்தை கண்ணாடியின் மீது வைக்கும்போது கண்ணாடியில் தெரியும் பிம்பத்திற்கும் உங்கள் விரலுக்கும் இடையே இடைவெளி தெரிந்தால் அது சாதாரண கண்ணாடி. இடைவெளி இல்லையென்றால் அது உங்களை மறுபக்கத்தில் உள்ளவர்களுக்குக் காட்டும் டு வே மிரர். இதுபோல பல சோதனைகள் உள்ளன.

உடை மாற்றும் அறையில் கேமரா ஏதும் இருக்கிறதா என்பதையும் அறிந்துகொண்டு எச்சரிக்கையாக இருக்க முடியும். அந்த அறையை இருட்டாக்கிவிட்டு, உங்கள் மொபைலிலுள்ள கேமராவை ஆன் செய்து வீடியோ மோடில் வைத்தபடி கேமராவை அறையின் எல்லா பகுதிகளுக்கும் கொண்டு செல்ல அறையில் ரகசிய கேமரா இருந்தால், சிவப்புப் புள்ளியாக உங்கள் கேமராவில் தெரிந்து காட்டிக் கொடுத்துவிடும். இப்படிப்பட்ட இடங்களில் ஆடை மாற்ற நேர்ந்தால் அந்த அறையை இருட்டாக்கிவிட்டு, ஆடை மாற்றியதும் மறுபடி விளக்கை ஆன் செய்துவிட்டு சரிபார்த்துக் கொள்ளலாம். ட்ரெஸ்ஸிங் ரூம், பாத்ரூம் உள்ளிட்ட இடங்களில் கேமராவோ, இருபுற (டு வே) கண்ணாடியோ, நாம் பேசுவது பதிவு செய்யும்படியோ வைத்திருப்பது சட்டப்படி கூடாது'' என்கிறார் ஹம்சா.

குளியல் அறை மற்றும் ஹோட்டல்களில் ரகசிய கேமரா இருந்தால் கண்டுபிடிப்பது எப்படி? சைபர் க்ரைம் குறித்து விழிப்புணர்வூட்டிவரும் ஓய்வுபெற்ற கூடுதல் எஸ்.பி.பாலு, சொல்லும் தகவல் நம் கண்களை ஸூம் பண்ணவைக்கிறது,

"ஹிடன் ஸ்பை கேமரா, டு வே மிரர் இந்த ரெண்டும்தான் பலரது அந்தரங்கத்தை படம்பிடித்து பயமுறுத்துகிறது. ஒரு ஹோட்டலில் போய் தங்குவதற்கு அந்த அறைக்குள் நுழைகிறோம் என்றால் முதலில் மேனுவலாக செக் பண்ணவேண்டும். அதற்கு, சாதாரணமாக கண்களை சுழலவிடவேண்டும். தேவையில்லாத கரண்ட் வயர்கள், ஃப்ளவர் அரேஞ்ச்மெண்ட், சுவற்றில் தேவையில்லாத படங்கள், இரவு நேர விளக்குகள், ஃபயர் பிரிவென்ஷன் கருவிகள், அலாரம், எலக்ட்ரிக்கல் ப்ளக்,

டிஷ்யூ பேப்பர் ஹோல்டர், செல்ஃபோன், கபோர்டு என எல்லாவற்றையும் ஒருமுறை செக் பண்ணவேண்டும். தேவையில்லாமல் உங்கள் அறையில் ஒரு டெடிபர் பொம்மை இருந்தால்கூட எச்சரிக்கையோடு கவனிக்கவேண்டும். ஏனென்றால் இது போன்ற பொம்மைகளின் கண்களில்கூட ரகசிய கேமராக்களை ஃபிக்ஸ் பண்ணி வைத்து படம் பிடிக்கிறார்கள்'' என்கிறார் எச்சரிக்கையூட்டும் வகையில்.

சைபர் செக்யூரிட்டி எக்ஸ்பர்ட் விஜயகுமாரோ, ''தங்கும் அறையின் லைட் அனைத்தையும் ஆஃப் பண்ணிட்டு பார்த்தா பச்சை கலரிலோ சிவப்பு கலரிலோ லைட் எரிந்தாலும் அதை சந்தேகிக்கவேண்டும். காரணம், ஹிடன் கேமராக்களின் சைஸ் என்பது 1 எம்.எம். அல்லது 2 எம்.எம்.தான் இருக்கும். இப்போதெல்லாம், ஸ்பைகேமரா டிடெக்டர் கேடட் எக்யூப்பெண்ட் என்றே 2000 ரூபாயிலிருந்து 5.000 ரூபாய் வரை விலையில் விற்கிறது. அந்த டிடெக்டரை அந்த அறையில் ஆன் பண்ணிவிட்டு பார்த்தாலே ரகசிய கேமரா பொருத்தப்பட்டிருக்கிறதா என்பதை காட்டிக்கொடுத்துவிடும். ஆனால், இவ்வளவு விலை கொடுத்து எல்லோரும் வாங்கவும் முடியாது.

அப்படியே வாங்கினாலும் வெளியூர்களுக்கு ஹோட்டல்களில் தங்க செல்லும்போது உடன் எடுத்துச் செல்லவும் முடியாது என்கிறவர்கள் ஸ்மார்ட்/ ஆண்ட்ராய்டு ஃபோன்களில் இதற்கான மொபைல் அப்ளிகேஷன்கள் வந்துவிட்டன. உதாரணத்திற்கு... **http://www.hcdapp.com** என்ற அப்ளிகேஷன் உள்ளது. 500 ரூபாயிலிருந்து 600 ரூபாய்தான் இந்த அப்ளிகேஷனை டவுன்லோடு செய்துகொள்வதற்கான கட்டணம். இதை உங்கள் மொபைல்களில் பதிவிறக்கம் செய்து வைத்துக்கொண்டு சந்தேகப்படும் ஹோட்டல் அறையை வீடியோ எடுத்தால், அங்கு ரகசிய கேமரா இருந்தால் ரெட் லைட் எரிந்து காட்டிக்கொடுக்கும். ஒருவேளை, உங்கள் அறையில் உங்கள் அந்தரங்க/ ரகசிய பேச்சுக்களை ஒட்டுகேட்க மைக்ரோ ஃபோன் வைத்திருந்தாலும் உங்களது ஃபோனில் அவுட்கோயிங் கால் செய்துவிட்டு சந்தேகப்படும் இடங்களில் சுழட்டினால் போதும் கொர கொரன்னு ஒரு சத்தம் வருவதை வைத்து மைக்ரோஃபோன் இருப்பதை கண்டுபிடித்துவிடலாம். வெளியில் சுற்றிவிட்டு மீண்டும் ஹோட்டல் அறைக்கு வரும்போதும் இதனை செக்கப் செய்யவேண்டும்'' என விரிவாகவே விவரித்தார்.

இதுகுறித்து சென்னை மாநகர காவல்துறை சைபர் க்ரைம் அசிஸ்டெண்ட் கமிஷனர் வெங்கடாசலபதியிடம் கேட்டபோது, ''வெளியிடங்களுக்கு செல்லும் பெண்கள் விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டும். குடும்பப்பெண்ணாக இருந்தாலும் சரி, நடிகைகளாக இருந்தாலும் சரி இப்படி அந்தரங்கம் வெளியாகும்போது தயங்காமல் வந்து சைபர் க்ரைமில் புகார் கொடுக்கவேண்டும். இப்படி, அந்தரங்கத்தை படம் பிடித்து சமூக வலைதளத்தில் விடும் குற்றவாளிகளுக்கு மூன்று வருடங்களுக்குமேல் சிறைத் தண்டனையும் 2 லட்சம் அபராதமும் விதிக்கப்படும். சந்தேகத்துக்குள்ளாகும் ஓட்டல்கள் குறித்தும் புகார் கொடுக்கலாம். புகார்களின் ரகசியம் காக்கப்படும்'' என்கிறார் அவர்.

பிரபலமான நடிகைகள் முதல் சராசரி குடும்பப்பெண்கள் வரை புகார் கொடுக்கத் தயங்குகிறார்கள் என்பதே யதார்த்த நிலை. அதை சாதகமாக்கிக் கொண்டு இதுபோன்ற வீடியோக்களை வில்லங்க வில்லன்கள் வெளியிட்டு வருகிறார்கள்.

நடிகர் விஜய் ஹோட்டல் ரூம்களில் தங்க நேரிடும்போது தனக்கு ஒதுக்கப்படும் ரூமில் 10 நிமிடம் ரெஸ்ட் எடுத்துவிட்டு, ஹோட்டல் நிர்வாகத்தை அழைத்து ஏதாவது ஒரு ஃப்ளோரை சொல்லி, அங்கே இந்த ரூம் கொடுங்க என்று கேட்பது வழக்கம். அந்த ரூம் இல்லையென்றால் வேறு ரூம் கேட்டு மாறிவிடுவார். காரணம், தனக்காக முன்கூட்டியே ஒதுக்கப் பட்ட ரூமில் ரகசிய கருவிகள் ஏதேனும் வைக்கப்பட்டிருக்கலாம் என்கிற முன்னெச்சரிக்கைதானாம். பிரபல நடிகர் என்பதால் விஜய்க்கு ரூம் மாற்றித் தருவதுபோல சாதாரண மனிதர்களுக்கு கிடைக்காது என்றாலும் முடிந்தளவு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியம்.

வீடியோ வில்லன்களைத் தண்டிக்கும் சட்டங்கள் கடுமையாக இருந்தால் மட்டும் போதாது; அதை செயல்படுத்துவதிலும் உறுதி வேண்டும். அப்போதுதான் இத்தகைய மோசமான செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்

**-மனோசௌந்தர்**

> "ஷாப்பிங் மாலுக்கு போயி ட்ரெஸ் எடுக்கிறோம். ட்ரையல் ரூம்ல போயி ட்ரையல் பண்ணிப் பார்க்கக்கூட நெஞ்சு திக்கு திக்குனு அடிச்சுக்குது."

www.nakkheeran.in